1974 ஏப்ரல் 17]

Thirupathisaram Agricultural School

* 847 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to increase the number of students in the Agricultural School at Thirupathisaram in Kanyakumari district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

விதைகள் வழங்கல்.

* 848 **வினா—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்குத் தேவைப்படும் பொறுக்கு **விதைகளை** அரசு அதிகாரிகளின் பொறுப்பிலேயே அரசுப் பண்ணைகளிலேயே தயாரித்து வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த மாநிலத்தின் மொத்தத் தேவையில் ஏறத்தாழ 10 சதவீதம் தான் அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தியாகிறது. மற்றவை அரசு அலுவலர்களின் மேற்பார்வையில் தனியார்களால் உற்பத்தி செய்யப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, மொத்தத் தேவையில் 10 சதவீதம் தான் அரசாங்கப் பண்ணைகளில் உற்பத்தியாவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். மீதி 90 சதவீதம் அரசு அதிகாரிகளின் மேற்பார்வையில் தனியாரிடமிருந்து பெறப்படுவதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னதான் மேற்பார்வை செய்தாலும், தனியார்கள் லாப நோக்கத்தோடு பல விதைகளில் கலப்படம் செய்து கொடுத்து விடுகிறார்கள். அதை வாங்கி உபயோகிக்கும் விவசாயிகள் மிகுந்த நஷ்டத்திற்கு

உள்ளாகிவிடுகிறார்கள். ஆகவே, நமக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்ய பண்ணைகளை லீசிற்கு எடுத்தோ அல்லது இருக்கிற விதைப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தோ, முழுக்க முழுக்க நமக்குத் தேவையான எல்லா விதைகளையும் அரசுப் பண்ணைகளில் உற்பத்தி செய்வதற்கு அரசிடம் திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. க. நாகராசன் : தலைவரவர்களே, விதைப் பட்டம் வருகிற போது வீரிய விதைகள் சரிவரக் கிடைப்பது இல்லை. வீரிய விதைகளைக் கொடுத்து விவசாயிகள் மிகுந்த உற்பத்தியைச் செய்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்குச் சரியான விதைப்பட்டத்தில் விதைகள் வழங்குவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏற்கனவே சொன்ன படி, இந்த மாநிலத்தின் மொத்தத் தேவையில் 10 சதவீதம் தான் அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தியாகிறது. அதை விரிவு படுத்துவதற்கும், மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் சொன்ன மாதிரி எல்லா விதைகளையும் அரசுப் பண்ணையில் உற்பத்தி செய்வதற்குமான திட்டம் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நமக்குத் தேவையான விதையில் 10 சதவீதம் தான் அரசு விதைப் பண்ணைகளில் இருந்து கிடைப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நமக்குத் தேவையான விதைகளை இன்னும் அதிக அளவில் உற்பத்தி செய்ய தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலுள்ள அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தியைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இப்போது ஏறத்தாழ 53 அரசு விதைப் பண்ணைகள் இருக்கின்றன. அவற்றை விரிவு படுத்துவதன் மூலம் இன்னும் சிறந்த முறையில் விதைகளைப் பெருக்குவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவரவர்களே, 10 சதவீதம், நியூகிளியர் விதைகள் காரண்டி இல்லாமல் இருக்கின்றன. அதற்கு ரெஸ்பான்சிபிலிடி பிக்ஸ் செய்ய திட்டமிருக்கிறதா ?

1974 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, தனியார் அதை உற்பத்தி செய்தாலும் அரசு அலுவலாளர் மேற் பார்வையில் தான் அது செய்யப்படுகிறது. அது தரமான விதை என்பதற்கு சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படுகிறது. இருந்தாலும் கூட உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் சொன்னது போல் பல தவறுகள் நடந்து உள்ளன. தனியார் துறையில் உற்பத்தி செய்யப் படும் விதைகள் தரக்குறைவாக இருப்பதால், அரசு விதைப் பண்ணையில் எல்லா விதைகளையும் உற்பத்தி செய்யலாம் என்ற முறையில் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, பெரும்பாலும் விதைகள் கோயம்புத்தூர் அக்ரிகல்சுரல் காலேஜிலிருந்து வாங்கி அனுப்பப்படுகின்றன. போன வருஷம் எச்.பி. 3 கம்பு, எச்.பி. 4 கம்பு பூராவும் வெள்ளைப்பொட்டாக வந்திருக்கிறது. பூரா விதை யும் மோசமாக இருக்கிறது. அங்கேயிருக்கும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். காரணம் சரியான நேரத்தில் போய்ப் பார்த்து விதை கொடுப்பது இல்லை. ஆகவே, சரியான முறையில் விதை கொடுக்க அரசு மாற்று ஏற்பாடு ஏதேனும் செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற சம்பவம் எனக்கு நன்றாகத் தெரியும். எச்.பி. 3 கம்பு விளைச்சல் இல்லாமல் போய்விட்டது. அது தனியார் துறையில் செய்யப்பட்ட விதை. அதை அதிகாரிகள் சர்ட்டிபை செய்தது உண்மை என்றாலும், தேவையான அளவுக்குக் கண்காணிப்பு இல்லாமல் போய் இருக்கிறது. தனியார் துறை அதிக லாபம் பெறுவதைத் தடுப்பதற்கும், நல்ல தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கும் என்ன செய்யலாம் என்பது அரசின் ஆய்வில் இருக் கிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் 10 சதவீதம் அரசு விதைப்பண்ணையிலும், 90 சதவீதம் தனியார் விதைப் பண்ணையிலும் வாங்குவதாகச் சொன்னார்கள். அப்படித் தனி யாரிடமிருந்து வாங்கும் விதைகளை அதிகாரிகள் சர்ட்டிபை செய் கிறார்கள் என்றும் சொன்னார்கள். அப்படி சர்ட்டிபை செய்யப்

பட்ட விதைகளும் முளைக்காமல் இருந்திருக்கின்றன. அப்படி சர்ட்டிபை செய்த அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : குறிப்பிட்ட ஒரு சம்பவம் என் எண்ணத்தில் இருக்கிறது. அதற்கு சான்றிதழ் கொடுத்த அதிகாரி யார் என்று பார்த்து அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று குறிப்பு எழுதி அனுப்பியிருக்கிறேன்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம் செங்கத்தில் ஒரு அரசாங்க விதைப் பண்ணை இருக்கிறது. அது மத்திய அரசாங்கம் நடத்தும் விதைப் பண்ணை. அதிலிருந்து தமிழக அரசு ஏதேனும் விதை பெறுவதற்கான முயற்சியை எடுத்து இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, செங்கத்திலே இருப்பது விதைப் பண்ணையில்லை. ஏறத்தாழ 10,000 ஏக்கர் நிலம் நமது மாநில அரசு மத்திய அரசுக்குக் கொடுத்து இருக்கிறது. ஏக்கர் ஒறுக்கு 1 ரூபாய் அளவு மட்டும் வாடகையாக, குத்தகைப் பணமாக நாம் வாங்கிவருகிறோம். அவர்கள் அங்கே பயிர் செய்வது விதைக்கு மாத்திரமல்ல. அவர்கள் அங்கே 'பார்ம்' அமைத்து, அதில் லாபம் பெறமுடியும், பயிர் முறைகளில் அபிவிருத்தி செய்யமுடியும் என்ற அடிப்படையில் செய்து வருகிறார்கள். விதைகள் வழங்கும் நிலைமையில் அந்தப் பண்ணை இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, விவசாய அதிகாரிகள் மேற்பார்வை செய்தும் விதைகள் தரம் குறைந்து இருப்பதற்குக் காரணம் அதிகாரிகள் கவனக்குறைவு தான். அப்படிப்பட்ட சில நேரங்களில் வந்து விடுகிற விதைகளை வாங்கிப் போட்டால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சரியான விதைகளை உற்பத்தி செய்வதற்காக, நௌலாக் விதைப் பண்ணையை அபிவிருத்தி செய்து, சீரிய முறையில் விதைகளை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : குறிப்பாக நௌலாக் பண்ணைபற்றிச் சொன்னார்கள். விதைப் பண்ணைகளைப் பெருக்குவதற்கும், புதிதாக சீட்ப்ராசசிங் யூனிட் விதைகளை சீர் செய்வதற்குமான இயந்திரம் ஒன்றை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

1974 ஏப்ரல் 17]

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் இப்படித் தரக்குறைவான விதைகள் வருவதால் அங்கேயிருக்கும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் போதிய அளவு தாங்குகிற விதைகளைப் பயிரிடுவதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 10 ஏக்கர் என்று ஒதுக்கி, விவசாய அதிகாரிகளே நேரடியாகப் பயிரிட்டு, அந்த விதைகளை விவசாயிகளுக்கு வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் சொன்னது வேறு ஒரு கருத்து. ஒன்றியங்களில் மாடல் பார்ம் அமைக்க வேண்டுமென்று கருத்து சொன்னார்கள். அதுவும் அரசின் ஆய்வில் இருக்கிறது.

Prize for Municipalities

* 849 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have decided to present every year a rolling shield to the best maintained municipality in the State; and

(*b*) if so, from when?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு நிதி ஆண்டின் முடிவிலும் இக்கேடயம் வழங்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : இப்படித் தேர்ந்தெடுக்கப்படும் பொழுது, எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ? எப்படிப்பட்ட முனிசிபாலிடிகளுக்கு இந்தப் பரிசு கொடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்தக் கேடயம் வழங்குவதற்கு நகராட்சிகளுக்கு சில விதிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. நிர்வாகத்திற்கு 10 மதிப்பெண், போக்குவரத்துக்கு 10, கல்விக்கு 20, பொதுசுகாதாரத்திற்கு 20, தெரு விளக்குகள் 5, குடிநீர் அண்டு வடிகால் 20, வருவாய் 5, இதர வகை 5, ஆக 100 மதிப்பெண் வைத்து, அந்த அடிப்படையில்